கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No. 110/2025 நாள்: 21.04.2026

வா.சா.1 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு வாதி தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக நீதிமன்ற அனுமதியின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி

வா.சா –1 அங்கையற்கண்ணி முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

வா.சா.1 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு வாதி தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக நீதிமன்ற அனுமதியின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 10.05.2020 ஆம் தேதியிட்டு எனது வளைகாப்பில் இறந்து போன எனது தாயார் S. முத்துலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்திய புகைப்படங்கள் 5 எண்ணம் அத்துடன் pendrive சேர்ந்தது பிரிவு 63(4) உடன் இணைந்த பிரிவு 63(3) BSA சான்றிதழ் வா.சா.ஆ.10

2. 07.01.2016 ஆம் தேதியிட்டு நான் எனது தாயார் மற்றும் 1ஆம் பிரதிவாதியின் மீது மதுரை SS காலனி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு வழங்கப்பட்ட புகார் மனு ரசீது (ரசீது எண்.39/2016) அசல் வா.சா.ஆ.11

3. 01.03.2017 ஆம் தேதியிட்டு எனது முதல் திருமணம் கலைக்கப்பட்டதற்கு மதுரை குடும்ப நல நீதிமன்றம் HMOP No.16/2016 வழங்கப்பட்ட தீர்ப்பின் உண்மை நகல் வா.சா.ஆ. 12

4. எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.13

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(1,2 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.04.21 16:46:44 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.